மக்கள் பொது மனித சமூக சேவை அறக்கட்டளை
MAKKAL PODHU MANITHA SAMUGA SEVAI ARAKKATTALAI
(ISO.RTI.HR.TM.10A.)
திருப்பூர் மாவட்டம்
HUMAN RIGHTS
உறுப்பினர் மற்றும் நிர்வாகிகள் சேர்க்கைக்கு...
REG:NO. 4/11-2026
98405 74726 - 97865 01230

# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"

மக்கள் பொது மனித சமூக சேவை அறக்கட்டளை
MAKKAL PODHU MANITHA SAMUGA SEVAI ARAKKATTALAI
(ISO.RTI.HR.TM.10A.)
திருப்பூர் மாவட்டம்
HUMAN RIGHTS
உறுப்பினர் மற்றும் நிர்வாகிகள் சேர்க்கைக்கு...
REG:NO. 4/11-2026
98405 74726 - 97865 01230

Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 02 | ISSUE: 72 | 07.09.2026 | MONDAY | AAVANI : 21 | PRICE : RS.5/-

மலர் : 02 | இதழ் : 72 | 07.09.2026 | திங்கள்கிழமை | ஆவணி : 21 | விலை : ரூ.5/–

## 'கிராம சபைகளை வலுப்படுத்த வேண்டும்'

# "முதல்வர் விஜய்க்கு கமல்ஹாசன் கடிதம்"

சென்னை: செப்.7–

'கிராம சபைகளை மேலும் வலுப்படுத்தி, அதிக மக்கள் பங்கேற்பு கொண்டதாகவும், தன்னாட்சி பெற்றதாகவும் மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று தமிழக முதல்வர் விஜய்க்கு மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் கடிதம் எழுதியுள்ளார்.

முதல்வர் விஜய்க்கு மநீம தலைவர் கமல்ஹாசன் எழுதியுள்ள கடிதத்தில், 'தமிழ்நாடு மக்கள் உங்கள் தலைமையின் மீது நம்பிக்கை வைத்து, மாநிலத்தை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பை உங்களிடம் ஒப்படைத்துள்ளனர். உங்கள் தலைமையில், அரசை மக்களிடம் மேலும் நெருக்கமாகக் கொண்டு சேர்க்கும் மக்களாட்சி மற்றும் நிர்வாக அமைப்புகளை மேலும் வலுப்படுத்த ஒரு நல்ல வாய்ப்பு உள்ளது.

வருகிற 2 அக்டோபர் 2026 அன்று தமிழ்நாடு முழுவதும் கிராமசபைக் கூட்டங்கள் நடைபெறவுள்ள நிலையில், கிராம சபையை மிகவும் பயனுள்ள மற்றும் வலுவான மக்களாட்சி அமைப்பாக மாற்ற சில கோரிக்கைகளை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 243A–ன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கிராம சபை, மக்கள் நேரடியாகப் பங்கேற்கும் ஜனநாயகத்தின் மிக முக்கிய வடிவமாகும். இங்குதான் பொதுமக்கள் ஒன்றாகக் கூடி, தங்கள் கோரிக்கைகளை எடுத்துரைத்து, ஊர் தொடர்பான பிரச்சினைகளை விவாதித்து, உள்ளாட்சி நிர்வாகத்தில் நேரடியாகப் பங்கேற்க முடியும்.

பஞ்சாயத்து ராஜ் அமைப்பின் கீழ் கிராம சபைகளைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு 30 ஆண்டுகால நெடிய அனுபவத்தைக் கொண்டுள்ளது. இக்கால கட்டத்தில் அமைந்த அரசுகள் கிராம சபை அமைப்புகளை வலுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளன. உங்களது தலைமை, அந்த அடித்தளத்தை மேலும் வலுப்படுத்தி, கிராம சபையை அதிக மக்கள் பங்கேற்பு கொண்டதாகவும், மக்களின் கோரிக்கைகளுக்கு உடனுக்குடன் பதிலளிப்பதாகவும், அதிகாரமிக்கதாகவும் மாற்ற முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இது தொடர்பாக, நான் பின்வரும் கோரிக்கைகளைத் தங்களது பரிசீலனைக்கு வழங்குகிறேன்:

1. பஞ்சாயத்துப் பிரதிநிதிகளின் மாதாந்திர மதிப்பூதியத்தை (Honorarium) கணிசமாக உயர்த்துதல்

கிராம பஞ்சாயத்துத் தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் வார்டு உறுப்பினர்கள் மக்களுக்கு மிக நெருக்கமாக இருக்கும் மக்கள் பிரதிநிதிகள் ஆவர். அவர்கள் மிகப்பெரிய பொறுப்புகளைச் சுமக்கிறார்கள்.

தற்போது அவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர மதிப்பூதியமானது மிகவும் குறைவாக உள்ளது. உதாரணமாக, கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களின் மாதாந்திர மதிப்பூதியமானது 2021–ல் ரூ.1,000–லிருந்து ரூ.2,000 ஆக உயர்த்தப்பட்டது.

தமிழ்நாடு அரசு இந்த மாதாந்திர மதிப்பூதியத்தை பின்வருமாறு கணிசமாக உயர்த்தப் பரிசீலிக்க வேண்டும்:

* கிராம பஞ்சாயத்து தலைவர்: மாதம் ரூ.16,000



* கிராம பஞ்சாயத்துத் துணைத் தலைவர்: மாதம் ரூ.10,000

* கிராம பஞ்சாயத்து வார்டு உறுப்பினர்: மாதம் ரூ.8,000

அடித்தட்டு நிர்வாகத்தில் அவர்கள் செலவிடும் நேரம், பொறுப்பு மற்றும் மக்கள் சேவையைக் கருத்தில் கொண்டு இந்த உயர்வு வழங்கப்பட வேண்டும்.

2. உள்ளூர் டாஸ்மாக் கடைகள் குறித்த முடிவில் கிராம சபைக்கு அதிகாரம் அளித்தல்

கிராமங்களில் மதுக்கடைகள் அமைப்பது தொடர்பான முடிவுகளில் உள்ளூர் மக்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். முறையாகக் கூட்டப்பட்ட கிராம சபையில், ஒரு டாஸ்மாக் கடைக்கு எதிராக மக்கள் தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் தீர்மானம் நிறைவேற்றினால், தகுந்த நடைமுறைகளுடன் அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் அக்கடையை மூடுவதற்கான அதிகாரத்தை தமிழ்நாடு அரசு உருவாக்க வேண்டும்.

அதேபோல, ஒரு கிராமத்தில் புதிய டாஸ்மாக் மதுபானக் கடை திறப்பதற்கு முன்பும் கிராம சபையின் ஒப்புதல் கட்டாயமாக்கப்பட வேண்டும். அரசின் வருவாயைக் காட்டிலும், உள்ளூர் மக்களின் சமூக நலனுக்கும் அவர்களின் கூட்டுக் குரலுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

3. விழிப்புணர்வை அதிகரித்தல் மற்றும் மாதிரி கிராம சபைகளை நேரலை செய்தல்

கிராம சபையின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கவும், பொதுமக்கள் பங்கேற்பை ஊக்குவிக்கவும் அரசு தொடர் விழிப்புணர்வு பிரச்சாரங்களை மேற்கொள்ள வேண்டும். ஒரு முன்னோடி முயற்சியாக, தமிழ்நாடு முழுவதும் நடைபெறும் சிறந்த கிராம சபைக் கூட்டங்களை முதல்வர், அமைச்சர்கள் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்களின் பங்கேற்புடன் நேரலை செய்ய வேண்டும். இது ஒரு முன்மாதிரியான துடிப்பான கிராம சபை எப்படி இருக்க வேண்டும் என்பதை மக்களுக்குக் காட்டி, மாநிலம் முழுவதும் பங்கேற்பை அதிகரிக்கச் செய்யும். மேலும், கிராம சபைக் கூட்டங்களுக்கு முன்பாகச் செய்தித்தாள்கள், தொலைக்காட்சி மற்றும் பிற ஊடகங்கள் வாயிலாக அரசு விழிப்புணர்வுச் செய்திகளை வெளியிடலாம்.

4. கிராம சபை தீர்மானங்களைச் சரியாகச் செயல்படுத்துவதை உறுதி செய்தல்

கிராம சபையின் நம்பிக்கை என்பது கூட்டம் முடிந்த பிறகு எடுக்கப்படும் நடவடிக்கைகளில்தான் உள்ளது. கிராம சபை தீர்மானங்கள் மீது குறிப்பிட்ட காலவரையறைக்குள் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்; மேலும் அதன் விவரங்கள் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். முந்தைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை அறிக்கை (Action Taken Report), அடுத்த கிராம சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். தங்கள் தீர்மானங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதை மக்கள் உணரும்போது, கிராம சபையின் மீது நம்பிக்கை அதிகரித்து, மக்கள் பங்கேற்பும் இயல்பாகவே உயரும்.

5. கிராம சபை விவாதப் பட்டியலில் (Agenda) மக்களுக்கு அதிக வாய்ப்பளித்தல்

கிராம சபைக் கூட்டத்திற்கு குறைந்தபட்சம் 7 நாட்களுக்கு முன்பே பொது அறிவிப்பும், விவாதப் பட்டியலும் வெளியிடப்பட வேண்டும் என்ற அரசின் விதியைச் சரியாகப் பின்பற்ற வேண்டும். கூடுதலாக, கிராம சபைக் கூட்டத்தில் விவாதிக்க வேண்டிய தலைப்புகளைப் பொதுமக்கள் முன்மொழிவதற்கு எளிமையான வழிமுறை இருக்க வேண்டும். மக்கள் முன்மொழியும் தலைப்புகள், தகுந்த நடைமுறைகளுக்கு உட்பட்டு கிராம சபையின் விவாதத்திற்கு வைக்கப்பட வேண்டும்.

டெங்கு தடுப்பு, பேரிடர் ஆயத்தம், நீர் மேலாண்மை போன்ற மாநில அளவிலான முக்கிய விஷயங்களை அரசு கிராம சபையின் விவாதத்திற்கு வைக்கலாம். ஆனால், அவை உள்ளூர் மக்கள் எழுப்பும் கோரிக்கைகளுக்குப் பதிலாக இல்லாமல், கூடுதல் தலைப்புகளாகவே இருக்க வேண்டும்.

6. உள்ளாட்சிப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சியை வலுப்படுத்துதல்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் மூலம் மக்கள் பிரதிநிதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் பயிற்சி அளிக்கும் கட்டமைப்பு தமிழ்நாட்டில் ஏற்கனவே உள்ளது. இருப்பினும், உள்ளாட்சி நிர்வாகம் தொடர்பான பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் ஆவணப்படுத்தும் முறைகளை மேலும் வலுப்படுத்த வேண்டும். கிராம சபையின் செயல்பாடு, மக்கள் பங்கேற்பு நிர்வாகம், பரவலாக்கப்பட்ட திட்டமிடல் மற்றும் பஞ்சாயத்து நடைமுறைகளில் அதிகக் கவனம் செலுத்தும் வகையில், கூடுதல் அதிகாரமும் பரந்த பயிற்சித் திட்டங்களும் கொண்ட ஒரு வலுவான ஆராய்ச்சி மற்றும் பயிற்சி அமைப்பை அரசு உருவாக்க வேண்டும்.

7. கிராம வளர்ச்சியில் மக்களின் பங்களிப்பை உறுதி செய்தல்

கிராமங்கள் தங்களின் வளர்ச்சித் தேவைகள் குறித்து விவாதித்து, தேவைகளைத் தீர்ப்பதற்கான திட்டங்களைத் தீட்டும் இடமாக கிராம சபைகள் மாற வேண்டும். அரசு ஏற்கனவே முடிவு செய்த திட்டங்களை மக்களிடம் தெரிவிப்பதாக மட்டும் இல்லாமல்; குடிநீர், சுகாதாரம், சாலைகள், வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் நலத்திட்டங்கள் குறித்த தங்களின் தேவைகளை மக்களே நேரடியாகக் கூறி, கிராம பஞ்சாயத்து வளர்ச்சித் திட்டத்தை (VPDP) உருவாக்குவதில் நேரடியாகப் பங்கேற்க வழிவகை செய்ய வேண்டும்.

8. அடித்தட்டு அளவில் வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புணர்வையும் உருவாக்குதல்

மக்களாட்சியின் பலம் என்பது, மக்கள் எந்த அளவுக்குப் பொது அமைப்புகளைக் கேள்விகள் கேட்டு பொறுப்பேற்கச் செய்கிறார்கள் என்பதில்தான் உள்ளது. எனவே, கிராம சபை என்பது வெறும் சட்டப்பூர்வமான சம்பிரதாய கூட்டமாக மட்டும் இல்லாமல், மக்கள் கேள்விகள் கேட்கவும், விவாதிக்கவும், உள்ளாட்சி நிர்வாகத்தைப் பொறுப்பேற்கச் செய்யவும் கூடிய உண்மையான தளமாக உயர வேண்டும்.

வரவிருக்கும் அக்டோபர் 2, 2026 கிராம சபைக் கூட்டங்கள், இந்தச் செயல்பாட்டை மேலும் வலுப்படுத்தி அடித்தட்டு ஜனநாயகத்தை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்ல ஒரு நல்ல வாய்ப்பாகும்.

நீங்கள் இந்தக் கோரிக்கைகளைப் பரிசீலித்து, உங்கள் தலைமையில் தமிழ்நாட்டின் கிராம சபைகளை மேலும் வலுப்படுத்தவும், அதிக மக்கள் பங்கேற்பு கொண்டதாகவும், தன்னாட்சி பெற்றதாகவும் மாற்ற நடவடிக்கை எடுப்பீர்கள் என்று உறுதியாக நம்புகிறேன்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

# சிறுவாச்சூர் மதுரகாளியம்மன் கோவில் அன்னதானத் திட்டத்தில் ஊழல்!..

## கண்டும் காணாத இணை ஆணையர்...

பெரம்பலூர், செப்.7–

தமிழக அளவில் மிகவும் பிரசித்தி பெற்ற சக்தி வாய்ந்த தளம்தான் சிறுவாச்சூர் மதுர காளியம்மன் கோவில்.

பெரம்பலூர் மாவட்டம் பெரம்பலூர் அருகே தேசிய நெடுஞ்சாலையின் கீழ் புறம் அமைந்துள்ள இக்கோவிலானது, வார நாட்களில் திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமையும், மாதாந்திர அமாவாசை பௌர்ணமி நாட்களில் என மாதத்திற்கு 10 நாட்கள் மட்டுமே கோவில் திறப்பது வழக்கம். இதுபோன்று வேறு எங்கும் இல்லாத அளவிற்கு சக்தி வாய்ந்த தளமாக இது அமைந்துள்ளது.

வார நாட்களான திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமை கோவில் திறப்பின் போது, அதிகாலை முதல் இரவு கோவில் நடை சாத்தும் வரை பக்தர்கள் அலை மோதுவது வழக்கம். ஆனால் அமாவாசை பௌர்ணமி நாட்களில் எப்போதும் இல்லாத அளவிற்கு கட்டுக்கடங்காத பக்தர்கள் கூட்டம் அலைமோதும்.



தென் தமிழக கூடுதல் ஆணையர் பொன்மணி ஐஏஎஸ்

தமிழகத்தின் பல மாவட்டங்களில் இருந்தும் பக்தர்கள் வந்து தரிசனம் பெற்றுச் செல்வது வழக்கமாக உள்ளது. இக்கோவிலில் உள்ள மதுர காளியம்மன் அந்த அளவிற்கு சக்தி உள்ள காளியாக பிரசித்தி பெற்று விளங்கி வருகிறது.

இக்கோவிலில் அன்னதானத் திட்டத்தில் தினசரி 100 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. கோவில் திறக்கும் நாட்களில் 200 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் தான் தொடர்ந்து ஊழல் நடைபெற்று வருவதாக இதுவரை புகார் அனுப்பியும், கடந்த ஆட்சியில் எவரும் கண்டு கொள்ளவில்லை என தெரிவிக்கின்றனர்.

இங்கு தட்டச்சராக பணிபுரியும் வெங்கடேசன் என்பவர் அன்னதானத் திட்டத்தின் கணக்காளராகவும் இருந்து வருகிறார். இங்கு அலுவலக உதவியாளராக பணிபுரியும் உமாராணி என்பவர் அன்னதானத் திட்ட பொருட்களின் வைப்பறை பொறுப்பாளராக உள்ளார். இவர்தான் தினசரி பொருட்களை அளவிட்டு சமையலுக்கு அனுப்புவது வழக்கமாக இருந்து வருகிறது. தினமும் 100 நபர்களுக்கான அன்னதானத்திற்கு 35 கிலோ அரிசி கொடுக்க வேண்டுமாம். ஆனால்



செயல் அலுவலர் அசனாம்பிகை

இவரோ 10 கிலோ அரிசியினை, தன் கையகப்படுத்திக் கொண்டு 25 கிலோ அரிசி மட்டும் தான் சமைப்பதற்கு கொடுப்பதாக கூறுகிறார்கள்.

இதற்கு முழு உடந்தையாக இருப்பது தட்டச்சரும், அன்னதானத் திட்டத்தின் கணக்காளருமான வெங்கடேசன்தானாம். வெங்கடேசன் உமாராணியும் சேர்ந்து அன்னதான பொருட்களை களவாடுவதில் குறியாக இருந்து வருகிறார்கள். சாதாரண நாட்களிலேயே இப்படி என்றால், கோவில் திறக்கப்படும் நாட்களில் 200 நபர்களுக்கு வழங்க வேண்டிய அன்னதானத்திற்கு கிட்டத்தட்ட 20 கிலோவுக்கு மேல் அபேஸ் செய்து விடுகிறார்களாம். இது இப்படி என்றால் அவர்கள் கொடுக்கும் அரிசியில் சமையலர் மணி என்பவர், அதிலும் கிட்டத்தட்ட 5 கிலோ அரிசியை களவாடிவிடுகிறாராம்.

இந்த விஷயம் கோவிலில் பணிபுரியும் செயல் அலுவலர் அசனாம்பிகை முதற்கொண்டு அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான் என்று கூறுகிறார்கள்.

செயல் அலுவலரிடமும் நேரடியாக பலமுறை புகார் கூறி இருப்பதாக கூறுகிறார்கள்.

கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் இங்கு முதல் நிலை செயல் அலுவலராக பணிபுரிந்து வரும் அசனாம்பிகை, இந்த அன்னதானத் திட்ட ஊழல் சம்பந்தமாக இதுவரை பெயரளவில் கூட விசாரணையோ அல்லது மேல் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க கூறியதோ கிடையாது என விவரம் அறிந்தவர்கள் கொதிப்படைந்துள்ளனர்.

தற்போது புதியதாக உருவாக்கப்பட்ட பெரம்பலூர் இணை ஆணையர் பணியிடத்திற்கு தனது கட்டுப்பாட்டில் உள்ள அறநிலையத்துறை ஊழியர்களை லெப்ட் அண்ட் ரைட் வாங்கி வரும், எளிமைக்கு பெயர் போன, இக்கோவிலுக்கு பலமுறை வந்துள்ள பெரம்பலூர் இணை ஆணையர் கார்த்திகேயன், இது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பாரா? இல்லை கண்டும் காணாமல் விட்டு விடுவாரா என விவரம் அறிந்த உள்ளூர் பக்த கோடிகள் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளனர்.

இந்து சமய அறநிலையத்துறை துறையின் தென் தமிழக கூடுதல் ஆணையர் பொன்மணி ஐஏஎஸ் சாட்டையை சுழற்றினால் மட்டுமே இது போன்ற ஊழல்களை கட்டுப்படுத்த முடியும்.

# ‘இஸ்ரோவை தனியாருக்கு தாரைவார்த்து அழிக்க விடமாட்டோம்’

## மாணிக்கம் தாகூர்



சென்னை, செப்.07–

‘விளம்பர அரசியலுக்காக விஞ்ஞானிகளைப் பகடைக் காயாக்கும் பாஜகவின் துரோகத்தை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இஸ்ரோவை தனியாருக்குத் தாரைவார்த்து அழிக்க விடமாட்டோம்’ என தமிழக காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், ‘ஒருபுறம் வானத்தை முட்டும் ராக்கெட்டுகள், நிலவையும் சூரியனையும் எட்டும் பெருமிதம், விரைவில் மனிதனை விண்ணுக்கு அனுப்பும் பிரம்மாண்டத் திட்டங்கள்... ஆனால், தேசமே கொண்டாடும் இந்த வெற்றிகளின் மறுபக்கம் என்ன?.

இரவு பகல் பாராமல் குடும்பங்களை மறந்து உழைத்த நமது விஞ்ஞானிகளின் தியாகம், தோல்விகளைக் கடந்து சிந்திய கண்ணீர், அவர்களின் கடுமையான பணிச்சுமை மற்றும் மன அழுத்தம்.

இதைவிடப் பெருங்கொடுமை என்னவென்றால் – ஒருபுறம் உலகமே வியக்கும் ராக்கெட்டுகளை விண்ணுக்கு அனுப்பும் அதே கைகள், மறுபுறம் தங்கள் வேலைப் பாதுகாப்புக்காகவும், முறையான ஊதியத்திற்காகவும், வாழ்வாதாரத்திற்காகவும் அதிகார வர்க்கத்திடம் கோரிக்கை மனுக்களையும் கண்ணீர்க் கடிதங்களையும் அனுப்ப வேண்டிய அவல நிலை நிலவுகிறது.

நினைவிருக்கட்டும். 1969 ஆகஸ்ட் 15 அன்று, தொலைநோக்குப் பார்வையோடு நேருவும், இந்திரா காந்தியும், விக்ரம் சாராபாய் போன்ற மேதைகளும் இணைந்து, பொதுத்துறையின் வலிமையான அரணாக இஸ்ரோவுக்கு (ISRO) அடித்தளமிட்டது காங்கிரஸ் பேரியக்கம்.

கிட்டத்தட்ட 60 ஆண்டு காலம் தன்னிறைவுக்காகக் கட்டியெழுப்பப்பட்ட நமது விஞ்ஞானிகளின் மாபெரும் உழைப்பையும் லட்சியத்தையும், இன்று கார்ப்பரேட் முதலாளிகளுக்குத் தாரைவார்த்து, ஊழியர்களின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கி சிதைக்கத் துடிக்கிறது பாஜக அரசு.

விஞ்ஞானிகள் சாதனை படைக்கும் போது மட்டும் ஓடிவந்து கேமரா வெளிச்சத்தில் நின்று போட்டோஷூட் நடத்தும் பிரதமர் மோடி, அதே விஞ்ஞானிகள் தங்கள் பணிக்காகவும் உரிமைக்காகவும் கடிதம் எழுதித் தவிக்கும்போது கண்களை மூடிக்கொள்வது ஏன்? சாதனைக்கு சொந்தம் கொண்டாடும் மோடி அரசுக்கு, அந்த சாதனையை நிகழ்த்தும் உழைக்கும் கைகளின் வலி ஏன் புரிவதில்லை?.

விளம்பர அரசியலுக்காக விஞ்ஞானிகளைப் பகடைக் காயாக்கும் பாஜகவின் துரோகத்தை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இஸ்ரோ என்பது இந்தியாவின் அடையாளம்; அதைத் தனியாருக்குத் தாரைவார்த்து அழிக்க விடமாட்டோம்’ எனத் தெரிவித்துள்ளார்.

# ‘மக்கள்தொகை கணக்கெடுப்பில் ஓபிசி சாதிகளின் பட்டியல் இடம்பெற வேண்டும்’ - ஸ்டாலின்

சென்னை, செப்.07–

‘குளறுபடிகளுக்கு இடம் தராமல் சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். ஓபிசி மக்களின் உரிமையைக் காப்பாற்றச் சட்டப்பேரவையில் தீர்மானம் இயற்ற வேண்டும்’ என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், ‘தற்போது எடுக்கப்பட்டு வரும் மக்கள் தொகை கணக்கெடுப்பில் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சேர்ந்தோரைக் கணக்கிட *‘open-ended format to record caste details without a pre-determined drop-down list or standardized menu’* முறையை ஒன்றிய அரசு பயன்படுத்தும் என்று வெளியாகியுள்ள அறிவிப்பு ஏமாற்றம் அளிக்கிறது. ஓபிசி பட்டியலில் இடம்பெற்றுள்ளவை வகுப்புகள்தானே தவிர, அவை சாதிகள் அல்ல என்று ஒன்றிய அரசு தரப்பில் தரப்பட்டுள்ள விளக்கம் ஏற்புடையது அல்ல.

மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்து, ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் இடம்பெற்றுள்ள சாதிகளின் பட்டியலைப் பெற்று, தொகுத்து, பதிவேற்றி, அதில் இடம்பெற்றுள்ள சாதிகளில் ஒன்றைத் தெரிவு செய்யும் வாய்ப்பை மக்களுக்கு வழங்கும் வழிமுறையே குழப்பங்களுக்கு இடம் தராது. மாறாக, பொதுமக்கள் கூறும் சாதியின் பெயரைப் பதிவேற்றுவது குழப்பங்களுக்கே வழிவகுக்கும்.

இதனால் இந்தியாவில் 46 லட்சம் சாதிகள் இருப்பதாகக் குளறுபடியான கணக்கு வரும் என்ற ஆபத்தைச்



சமூகநீதியில் அக்கறை கொண்ட பலரும் சுட்டிக்காட்டுவதை அரசு புறந்தள்ளிவிடக் கூடாது.

சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் நோக்கமே பட்டியலினச் சமூக மக்களின் எண்ணிக்கையைப் போல, ஓபிசி மக்களின் உண்மையான எண்ணிக்கையையும் அவர்களது கல்வி, சமுதாய, பொருளாதார நிலைமையையும் அறிந்துகொள்வதுதான்.

அப்போதுதான் அவர்கள் அதிகாரம் பெறுவதற்கான இட ஒதுக்கீட்டுக் கொள்கைகளை வகுக்கவும், அவர்தம் முன்னேற்றத்துக்குத் தேவையான திட்டங்களைத் தீட்டவும் அரசுகளால் இயலும்.

அப்படி இருக்கையில், ஒன்றிய, மாநில அரசுகளின் ஓபிசி சாதிகளின் பட்டியலை வைத்து, அதிலிருந்து மக்கள் சாதிப்பெயரைத் தேர்வு செய்யும் முறையைப் பின்பற்றினால்தான் சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தப்படுவதன் நோக்கம் நிறைவேறும்.

தற்போதைய முறையைத் தொடர்ந்தால், மக்கள்தொகைக் கணக்கெடுப்புக்காகச் செலவிடப்படும் சுமார் 12 ஆயிரம் கோடி ரூபாயும், லட்சக்கணக்கான அரசு ஊழியர்களின் உழைப்பும் வீணடிக்கப்படும். இதனால் எந்தப் பயனும் இல்லை. இது வெறும் கண்துடைப்பு நடவடிக்கையாக அமைந்துவிடும் ஆபத்தைப் புறந்தள்ளக் கூடாது.

பொருத்தமற்ற விளக்கங்களைக் கூறி, ஒரு தவறை நியாயப்படுத்தாமல், குளறுபடிகளுக்கு இடம் தராமல், சாதிவாரிக் கணக்கெடுப்பின் உண்மையான நோக்கம் நிறைவேறுவதற்கான திருத்த நடவடிக்கைகளை உடனடியாக ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

கோடானுகோடி பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் சமூகநீதி உரிமையை உறுதிசெய்து, நீதி வழங்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வலியுறுத்துகிறேன்.

தமிழ்நாடு அரசும், தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில், நடப்பு சட்டப்பேரவை கூட்டத் தொடரிலேயே இதற்கான சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றி, உரிய அழுத்தத்தை ஒன்றிய அரசுக்கு வழங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.’ எனத் தெரிவித்துள்ளார்.



# சென்னையில் திருமலை திருப்பதி திருக்குடை ஊர்வலம் செப்.13ல் கோலாகலமாகத் தொடக்கம்!

சென்னை, செப்.07–

இந்து தர்மார்த்த சமிதி அமைப்பின் சார்பில், உலகப் புகழ்பெற்ற திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் புனித திருக்குடை ஊர்வலம் வரும் செப்டம்பர் 13ஆம் தேதி சென்னையில் வெகுவிமரிசையாகத் தொடங்க உள்ளது. ஆன்மீகச் சிறப்புமிக்க இந்த நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

செப்டம்பர் 13ம் தேதி அன்று காலை சரியாக 10:00 மணிக்குச் சென்னகேசவ பெருமாள் கோயிலில் சிறப்புப் பூஜைகள் மற்றும் வழிபாடுகளுடன் இந்தத் திருக்குடை ஊர்வலம் தொடங்குகிறது.

சிறப்புப் பூஜைகளுக்குப் பிறகு புறப்படும் இந்த ஊர்வலம் அன்று மதியம் 12:30 மணியளவில் பைராகி மடத்தைச் சென்று அடையும். அதனைத் தொடர்ந்து, மாலை 4:00 மணியளவில் வால்டாக்ஸ் சாலை வழியாகவும், கவுனி பகுதியைக் கடந்தும், சூளை நெடுஞ்சாலை மற்றும் ஓட்டேரி மேம்பாலம் வழியாகப் பயணம் செய்து இறுதியில் அயனாவரம் காசி விசுவநாதர் கோயிலைச் சென்றடையும் வகையில் வழித்தடம் அமைக்கப்பட்டுள்ளது.

வருடாந்திர வைபவமான இந்தத் திருக்குடை ஊர்வலத்தைக் காணவும், வெங்கடாஜலபதியின் திருக்குடைகளைத் தரிசிக்கவும் சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஏராளமான ஆன்மீகப் பக்தர்கள் வருகை தருவார்கள் என்பதால், ஊர்வலம் செல்லும் பாதைகளில் தகுந்த பாதுகாப்பு மற்றும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



# அ.தி.மு.க.,வில் மீண்டும் டிடிவி, சசிகலாவை இணைக்க எடப்பாடி தீவிர ஆலோசனை!

சென்னை, செப்.07–

அதிமுகவில் இருந்து பிரிந்து சென்ற சசிகலா, டிடிவி தினகரன் உள்ளிட்ட அனைத்து முக்கிய அதிருப்தியாளர்களை மீண்டும் கட்சியில் ஒன்றிணைப்பது குறித்துப் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தீவிரமாக ஆலோசித்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தல்களில் வெற்றியைப் பெறுவதற்கும், கட்சியின் பலத்தை மேலும் பலப்படுத்துவதற்கும் அதிமுக தொண்டர்களும், நிர்வாகிகளும் ஒற்றுமையுடன் இணைந்து செயல்படுவது அவசியமானது என கட்சியின் மூத்த தலைவர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்கள் எடப்பாடி பழனிசாமியிடம் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளனர். இதன் அடிப்படையில், அதிருப்தியாளர்கள் விவகாரத்தில் தனது முந்தைய நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு, அவர்களைக் கட்சியில் சேர்த்துக்கொள்வது தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்கு அவர் சம்மதித்துள்ளதாகத் தெரிகிறது.

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு கட்சியில் ஏற்பட்ட பிளவுகள் காரணமாகத் தனித்தனியாகச் செயல்பட்டு வந்த சக்திகள் மீண்டும் ஓரணியில் திரள்வது குறித்த இந்தச் செய்திகள் அரசியல் வட்டாரங்களில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த விவகாரம் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் மற்றும் அடுத்த கட்ட நகர்வுகள் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பழநியில் ‘வெற்றி வீடு திட்டம்’ பெயரில் த.வெ.க., வைத்த பேனர்

## சர்ச்சை காரணமாக அகற்றம்




திண்டுக்கல், செப்.07–

தமிழக அரசின் திட்டமான ‘வெற்றி வீடு’ திட்ட முகாம் நடக்கவிருப்பதாக பழநியில் தவெகவினரால் வைக்கப்பட்ட பிளக்ஸ் பேனரால் சர்ச்சை எழுந்துள்ளது. இதனை, எதிர்க்கட்சியினர் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

கிராமப்புறங்களில் குடிசை வீடுகளில் வசிக்கும் ஏழைகளுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டித் தரும் நோக்கில் ‘வெற்றி வீடு திட்டம்’ அறிமுகப்படுத்தப்படுவதாகவும், இத்திட்டத்தின் கீழ் முதல் ஆண்டிலேயே 70,000 வீடுகள் கட்ட ரூ.3,500 கோடி ஒதுக்கப்படுவதாகவும் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது.

இந்த திட்டம் அறிவிக்க மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இன்னும் நடைமுறைக்கு வராத நிலையில் பழநி அடுத்த சிவகிரிப்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட மருத்துவ நகர் பகுதியில் ‘வெற்றி வீடு திட்டம்’ வழங்கும் முகாம் நடக்கவிருப்பதாக தவெகவை சேர்ந்தவர்கள் பிளக்ஸ் பேனர் வைத்துள்ளனர்.

அதில், தமிழக அரசு முத்திரை, திண்டுக்கல் மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சரான விக்னேஷ் மற்றும் கட்சியினர் சிலரது படங்களும் இடம்பெற்றுள்ளன.

ஆனால், முகாம் நடைபெறும் இடம், நாள், நேரம் எதுவும் குறிப்பிடவில்லை. இருந்தும், அரசு திட்ட முகாம் தொடர்பாக வைக்கப்பட்டுள்ள பேனர் அதிகாரிகள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. வெற்றி வீடு திட்டம் தொடர்பாக வழிகாட்டு நெறிமுறைகளை அரசு வெளியிடாத நிலையில் அரசுக்கும், அதிகாரிகளுக்கும் தெரியாமல் அரசு விழாவை தனி நபர்கள் (தவெக கட்சியினர்) எப்படி நடத்த முடியும்; அரசு முத்திரையை தனி நபர்கள் எப்படி பயன்படுத்த முடியும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர், எதிர்க்கட்சியினர் கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றனர்.

மேலும், பேனர் வைத்தவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த சர்ச்சையை அடுத்து, பேனர் வைத்தவர்கள் தாங்களாகவே அந்த பேனரை அகற்றினர்.

# செங்கை அரசு மருத்துவமனையில் தேங்கி நிற்கும் மழைநீரால் நோயாளிகள் அவதி: சீரமைக்க வலியுறுத்தல்



செங்கல்பட்டு, செப்.07–

தமிழ்நாட்டின் ஒருசில மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக இரவு நேரங்களில் அதிகளவு கனமழை பெய்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக, செங்கல்பட்டு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று காலை வரை தொடர் மழை பெய்தது. இதனால், செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தின் பல்வேறு இடங்களில் மழைநீர் வெளியேற வழியின்றி, தற்போது சேறும் சகதியுமாக மாறியது. இந்த அரசு மருத்துவமனையில் செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவண்ணாமலை உள்பட சுற்றுவட்டார மாவட்டங்களை சேர்ந்த ஏராளமான மக்கள் நாள்தோறும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இம்மருத்துவமனையில் தற்போது பெய்த தொடர் மழை காரணமாக சேறும் சகதியுமான மழைநீரில் நோயாளிகள், டாக்டர்கள் மற்றும் மருத்துவ ஊழியர்கள் கடந்து செல்வதற்குள் பெரிதும் அவதிப்பட்டு வருகின்றர். இதில் ஏதேனும் ஒரு வாகனம் கடந்து செல்லும்போது சேற்றை வாரியிறைத்து வருவதால், டாக்டர்களின் வெள்ளை நிற உடை பாழாகி வருகிறது. இதேபோல், இங்குள்ள பிரேத பரிசோதனை அறையை சுற்றிலும் மழைநீர் தேங்கியுள்ளது.

இதுபோன்று பல்வேறு மழைக்காலங்களின்போது, செங்கல்பட்டு அரசு மருத்துவமனை வளாகத்தில் தேங்கி நிற்கும் மழை நீரை அகற்றி, அவற்றை முறையாக வெளியேற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மருத்துவமனை நிர்வாகத்திடம் நோயாளிகளின் உறவினர்கள் மற்றும் டாக்டர்கள் கோரிக்கை விடுத்தும், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

எனவே, செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தில் சேறும் சகதியுமாக தேங்கி நிற்கும் மழைநீரை அகற்றி சீரமைத்து, அங்கு நிரந்தரமாக மழைநீர் தேங்கி நிற்காத வகையில் உரிய பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மாவட்ட கலெக்டர் மற்றும் சுகாதாரத்துறை உயர் அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் வலியுறுத்துகின்றனர்.

# கல்லணையிலிருந்து காவிரி நீர் திறப்பு - டெல்டா மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி



தஞ்சாவூர், செப்.07–

காவிரி டெல்டா மாவட்டங்களின் சம்பா, தாளடி சாகுபடிக்கு தேவையான தண்ணீர் நேற்று காலை கல்லணையிலிருந்து திறந்து வைக்கப்பட்டது. இது டெல்டா மாவட்ட விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை, சம்பா, தாளடி என மூன்று போகம் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்த சாகுபடிக்கு தேவையான தண்ணீர் மேட்டூர் அணையிலிருந்து காவிரியில் திறந்து விடப்படும். இதற்காக மேட்டூர் அணையில் ஜூன் 12-ம் தேதி தண்ணீர் திறந்து விடப்படுவது வழக்கம்.

ஆனால், இந்தாண்டு மேட்டூர் அணையில் போதிய தண்ணீர் இல்லாத காரணத்தால், ஜூன் 12-ம் தேதி தண்ணீர் திறக்கப்படவில்லை.

இதையடுத்து மேட்டூர் அணைக்கு நீர் வரத்து 90 அடியாக உயர்ந்த நிலையில், அணையிலிருந்து தண்ணீரை திறக்க விவசாயிகள் விடுத்த கோரிக்கையை ஏற்று செப்.1ம் தேதி தமிழக முதல்வர் விஜய் மேட்டூர் அணைக்கு வந்து தண்ணீரை திறந்து விட்டார்.

தொடக்கத்தில் 3 ஆயிரம் கன அடி திறக்கப்பட்டு, படிப்படியாக 7 ஆயிரம் கன அடியாக உயர்த்தப்பட்டது. மேட்டூர் அணையில் திறக்கப்பட்ட தண்ணீர் 205 கிலோ மீட்டர் பயணித்து தஞ்சாவூர் மாவட்ட எல்லையான கல்லணைக்கு நேற்று மாலை வந்தது. இதையடுத்து கல்லணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்க முடிவு செய்யப்பட்டது.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் ஆர். வினோத், சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஏ.எம்.ஷாஜகான், டெல்டா மாவட்டங்களின் ஆட்சியர்கள், நீர்வளத்துறை மற்றும் வேளாண்மை துறை அதிகாரிகள், விவசாயிகள் ஆகியோர் கல்லணையில் உள்ள சுற்றுலா மாளிகையிலிருந்து மேளதாளத்தோடு ஊர்வலமாகப் புறப்பட்டு, காவிரி வெண்ணாறு, கல்லணைக் கால்வாய், கொள்ளிடம் ஆகிய ஆறுகளில் தண்ணீரை திறந்து வைத்தனர். அப்போது நவதானியங்கள், பூக்கள் ஆகியவற்றை தூவி விவசாயம் செழிக்க வேண்டிகொண்டனர்.

முன்னதாக கல்லணையில் உள்ள காவிரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாய், கொள்ளிடம் ஆகிய ஆறுகளில் உள்ள ஷட்டர்கள் சீரமைக்கப்பட்டு, வர்ணம் பூசப்பட்டது. மேலும், கரிகால்சோழன் சிலை, மாமன்னன் ராஜராஜசோழன் சிலை, அகத்தியர் சிலை, காவிரி தாய் சிலை, சர் ஆர்தர் காட்டன் சிலை ஆகியவை வர்ணம் பூசப்பட்டிருந்தன.

முதலில் காவிரி, வெண்ணாற்றில் தலா 1,000 கன அடியும், கல்லணைக் கால்வாய், கொள்ளிடத்தில் தலா 500 கன அடியும் வினாடிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. தொடர்ந்து படிப்படியாக தண்ணீர் திறக்கப்படும் அளவு உயர்த்தப்படும். இந்த தண்ணீர் திறப்பின் மூலம் காவிரி டெல்டா மாவட்டங்களில் சம்பா, தாளடி சாகுபடி செய்யப்படவுள்ளது.

## எம்.பி. தொகுதி மேம்பாட்டு நிதி

# அதிகாரிகளுக்கு கங்கனா ரனாவத் சரமாரி கேள்வி

டெல்லி, செப்.07–

பாஜக எம்.பி. கங்கனா ரனாவத், தனது எம்.பி. தொகுதி மேம்பாட்டு நிதி முறையாக பயன்படுத்தாமல் இருப்பது ஏன் என அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பி உள்ளார்.

இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள மண்டி மக்களவைத் தொகுதியில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு (திஷா) கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது.



இதில், அத்தொகுதி எம்.பி.யும், நடிகையுமான கங்கனா ரனாவத் பங்கேற்று தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி செலவிடப்படாமல் இருப்பது குறித்து வட்டார வளர்ச்சி அதிகாரிகளிடம் கோபமாக கேள்வி எழுப்பினார். இதுதொடர்பான, வீடியோ சமூக வலைதளங்களில் வேகமாகப் பரவியது.

இக்கூட்டத்தில் கங்கனா ரனாவத் பேசியதாவது: எனது தொகுதி நிதியின் கீழ் சுமார் ரூ.11 கோடி உள்ளது. இதில் சுமார் 90% நிதி செலவிடப்பட்டுவிட்டதாக என்னிடம் கூறப்பட்டது. ஆனால், சுமார் ரூ.50 லட்சம் மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. என்னிடம் தெரிவிக்கப்பட்ட புள்ளிவிவரங்களும் உண்மையில் செலவிடப்பட்ட தொகையும் ஒன்றுக்கொன்று பொருந்தவில்லை. இதுதொடர்பாக, அதிகாரிகள் விளக்கம் அளிக்க வேண்டும்.

இந்த நிதியில் 30 முதல் 40% வரை மோசடி செய்ததாகக் கூறப்படும் நபர்களுக்கு வழங்கப்பட்டதை சில விசாரணை அமைப்புகள் கண்டுபிடித்துள்ளன. அந்தப் பணத்தை அதிகாரிகளால் மீட்டெடுக்க முடியவில்லை. எம்.பி.யாக எனது செயல்பாடுகள் குறித்து தேசிய ஊடகங்கள் என்னை கேலி செய்கின்றன.

மண்டியில் நிறைவேற்றப்படாமல் உள்ள வளர்ச்சிப் பணிகள் குறித்து பொதுமக்கள் தினமும் சமூக வலைதளங்களில் வீடியோக்களை வெளியிட்டு வருகின்றனர். அதேநேரம், அதிகாரிகள் என்னைப் பற்றி அவதூறாகப் பேசிக் கொண்டிருக்கின்றனர். மண்டியில் நிலுவையில் உள்ள வளர்ச்சிப் பணிகளை விரைந்து முடிப்பதோடு, நிதியை முறையாகவும் அதிகாரிகள் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# எலுமிச்சை விலை கிடுகிடு உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி!

தென்காசி, செப்.07–

தென்காசி மாவட்டம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நிலவிவரும் தீவிரமான வெயில் தாக்கம் மற்றும் தொடர்ச்சியான திருவிழாக் காலத் தேவைகளின் அதிகரிப்பு காரணமாக, எலுமிச்சை விலை கணிசமாக உயர்ந்துள்ளது. இதனால் இப்பகுதி விவசாயிகளும் வியாபாரிகளும் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தென்காசி மாவட்டத்தின் முக்கிய விவசாய மையமான புளியங்குடி சந்தைக்கு வரும் எலுமிச்சைகளின் வரத்து கடந்த சில நாட்களாகக் குறைந்துள்ளது. மாநிலத்தில் நிலவும் கடும் வெயில் மற்றும் அவ்வப்போது வீசும் பலத்த காற்று காரணமாக, எலுமிச்சைச் செடிகளில் பூக்கள் மற்றும் காய்கள் பக்குவமடையாமல் உதிர்ந்துவிட்டன. இதனால் சந்தைக்குக் கிடைக்கும் எலுமிச்சையின் அளவு பாதியாகக் குறைந்துள்ளது.

மறுபுறம், பண்டிகைகள் மற்றும் திருவிழாக் காலங்கள் நெருங்கி வருவதால் பொதுமக்களிடையே எலுமிச்சக்கான தேவை சந்தையில் திடீரென பல மடங்கு அதிகரித்துள்ளது. தேவையும் வரத்துக் குறைவும் ஒரே நேரத்தில் சந்தித்துக் கொண்டதால், இதற்கு முன்பு கிலோ ஒன்றுக்கு ரூ.170 வரை விற்பனை செய்யப்பட்டு வந்த எலுமிச்சை, தற்போது கிடுகிடுவென உயர்ந்து ரூ.225 வரை விற்கப்பட்டு வருகிறது.

விலை உயர்வு தங்களுக்கு ஓரளவு லாபத்தைத் தந்தாலும், எதிர்காலத்தில் விலை வீழ்ச்சியிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், அதிகப்படியான விளைச்சலை வீணாக்காமல் பாதுகாக்கவும் அரசு தரப்பிலிருந்து சில முக்கிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். குறிப்பாக, எலுமிச்சையைக் கொண்டு மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளைப் இப்பகுதியில் அமைப்பதற்கு அரசு உரிய உதவிகளைச் செய்ய வேண்டும் என அவர்கள் வலியுறுத்துகின்றனர்



# தருமபுரியில் பைக்கில் இருந்து கீழே விழுந்த 2 குழந்தைகள் லாரி ஏறியதில் உயிரிழப்பு

தருமபுரி, செப்.07–

தருமபுரி மாவட்டம் காரிமங்கலம் அருகே பைக்கில் இருந்து கீழே விழுந்த 2 குழந்தைகள் லாரி ஏறியதில் உயிரிழந்தனர். தந்தை ஹரியுடன் பைக்கில் சென்ற கதிர்வேல்(6), சஞ்சய்(3) ஆகியோர் நிலைதடுமாறி சாலையில் கீழே விழுந்துள்ளனர்.

# “இதுதான் தமிழகத்தின் ‘வெற்றி சட்டம்-ஒழுங்கு’ நிலை!

## தவெக பிரமுகர் கொலை குறித்து உதயநிதி விமர்சனம்

சென்னை, செப்.07–

சென்னையில் தவெக பிரமுகர் ஒருவர் வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ள நிலையில், இதுதான் தமிழ்நாட்டின் ‘வெற்றி சட்டம்-ஒழுங்கு’ நிலை! என்று சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் விமர்சித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடக எக்ஸ் பதிவில், “நாளை மாண்புமிகு முதலமைச்சர் காவல்துறை மானியக் கோரிக்கை விவாதம் மீது பதிலுரை அளிப்பதற்கு முன்பாக அவரது கட்சிப் பிரமுகர் ஒருவரே தலைநகரில் கொலைக்கு ஆளாகியுள்ளார்.

அதுவும், தனது உயிருக்குப் பாதுகாப்பு வேண்டி ஆளும் த.வெ.க.வில் இணைந்த சரித்திரப் பதிவேடு குற்றவாளி சாலையில் ஓட ஓட விரட்டிக் கொல்லப்பட்டுள்ளார். இதுதான் தமிழ்நாட்டின் ‘வெற்றி சட்டம்-ஒழுங்கு’ நிலை!

தலைநகரிலேயே சாலையில், இப்படி ஒரு கொலை நடக்கும் அளவு சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுப் போயிருப்பதை நினைத்து வருத்துவதா?

இல்லை, சரித்திரப் பதிவேடு குற்றவாளிகள் எல்லாம் தஞ்சமாகும் குப்பைத் தொட்டியாகத் த.வெ.க. இருப்பதை நினைத்து வருந்துவதா?

இதற்கும் தி.மு.க.வை எப்படி குற்றம் சொல்லலாம் என யோசிப்பதை நிறுத்திவிட்டு, பொது மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.” என்று தெரிவித்துள்ளார்.

# மாமல்லபுரத்தை அழகாக்க 500 மரக்கன்றுகள் நட திட்டம்

மாமல்லபுரம், செப்.07–




உலகளவில் வரலாற்று பிரசித்தி பெற்ற தமிழக சுற்றுலாத்தலமான மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரை கோயில், ஐந்து ரதம், அர்ஜுனன் தபசு, வெண்ணெய் உருண்டை பாறை உள்பட பல்வேறு புராதன சின்னங்களை சுற்றிப் பார்க்க தமிழ்நாடு உள்பட பல்வேறு மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து நாள்தோறும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். இங்கு சுற்றுலா வரும் பயணிகள், மாமல்லபுரம் எல்லைப் பகுதியான கருகாத்தமன் கோயிலின் பின்புறமுள்ள பிடாரி ரதத்தைச் சுற்றி பார்க்கவும் பலர் ஆர்வம் காட்டுகின்றனர்.சுற்றுலா இடங்களை ஆராயுங்கள்

பின்னர் பிடாரி ரதத்தை சுற்றி பார்த்துவிட்டு வெளியே வரும் சுற்றுலா பயணிகளில் பலர், அங்கு தொல்லியல் துறையின் மதில்சுவரை ஒட்டியுள்ள காலி இடத்தில் பிளாஸ்டிக் பைகள், வாட்டர் பாட்டில் உள்பட ஏராளமான குப்பைக் கழிவுகளை போட்டுவிட்டு செல்கின்றனர். அதேபோல், அப்பகுதியில் ஏராளமான ஓட்டல் கழிவுகள் மற்றும் குப்பைகளை இரவு நேரங்களில் கொட்டிவிட்டு செல்கின்றனர். இதனால் அப்பகுதியே குப்பைமேடு போல் காட்சியளித்து, கடும் துர்நாற்றம் வீசியது.

இந்த குப்பை கழிவுகளை அகற்றி, அங்கு ஏராளமான மரக்கன்றுகளை நட்டு பராமரித்து அழகுபடுத்த வேண்டும் என்று நகராட்சிகளின் மண்டல இயக்குனர் மாரிச்செல்வி உத்தரவிட்டார். அவரது உத்தரவின் பேரில், மாமல்லபுரம் நகராட்சி ஆணையர் அபர்ணா மேற்பார்வையில், சுகாதார ஆய்வாளர் குருசாமி தலைமையில், நேற்று முதல் அப்பகுதியில் பொக்லைன் இயந்திரம் மூலமாக குப்பைக் கழிவுகளை அகற்றும் பணியில் நகராட்சி ஊழியர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.மேலும், அப்பகுதியில் குப்பைக் கழிவுகள் கொட்டுவதை தடுக்க, அங்கு 500க்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நட்டு பராமரிப்பதற்கு மாமல்லபுரம் நகராட்சி ஆணையர் அபர்ணா, சுகாதார ஆய்வாளர் குருசாமி ஆகியோர் திட்டமிட்டுள்ளனர். அவர்களின் முயற்சிக்கு பல்வேறு தரப்பினரும் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

இதுகுறித்து நகராட்சி அதிகாரிகள் கூறுகையில், மாமல்லபுரம் சிறந்த சுற்றுலாத்தலமாக உள்ளதால், எங்களுக்கு அந்நகரை தூய்மைப்படுத்த வேண்டிய கடமை உள்ளது. ஒருசில இடங்களில் சுற்றுலாப் பயணிகள் விழிப்புணர்வு இல்லாமல், கண்மூடித்தனமாக குப்பைக் கழிவுகளை வீசிவிட்டு செல்கின்றனர். இங்கு குப்பை போடக்கூடாது என பல்வேறு அறிவிப்பு பலகைகள் வைத்து எச்சரிக்கிறோம். இவற்றை மீறுபவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இதுதொடர்பாக சுற்றுலா பயணிகளிடையே விரைவில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெறும் என்று தெரிவித்தனர்.

## அமெரிக்காவின் இரட்டைக் கோபுர தாக்குதல் சம்பவம்

# ஒரு வாரத்துக்கு முன்பே எச்சரித்த வெள்ளை மாளிகை அதிகாரி

வாஷிங்டன், செப்.07–

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் கடந்த 2001-ம் ஆண்டு செப் .11-ம் தேதி, அல்காய்தா தீவிரவாதிகள் 2 பயணிகள் விமானத்தை கடத்திச் சென்று அங்கிருந்த இரட்டை கோபுர கட்டிடங்கள் மீது மோதினர். இதில் அந்தக் கட்டிடங்கள் தீப்பிடித்து எரிந்து இடிந்து தரைமட்டமானது.



இந்த சம்பவத்தில், அந்தக் கட்டிடத்தில் இருந்தவர்கள் மட்டுமல்லாது, 19 தீவிரவாதிகள், 300 தீயணைப்பு வீரர்கள் உட்பட மொத்தம் 2,996 பேர் உயிரிழந்தனர். இச்சம்பவத்துக்கு,

ஒசாமா பின் லேடனின் அல் காய்தா தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றது. இதையடுத்து பாகிஸ்தானில் பதுங்கி இருந்த ஒசாமா பின் லேடன், அமெரிக்க ராணுவத்தால் 2011 மே 2-ம் தேதி சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்நிலையில், இத்தாக்குதல் சம்பவம் குறித்து, ஒரு வாரத்துக்கு முன்பே வெள்ளை மாளிகைக்கு எச்சரிக்கை தகவல் வந்ததாக இப்போது தகவல் வெளியாகி உள்ளது. குறிப்பாக, இச்சம்பவத்துக்கு ஒரு வாரம் முன்பு அப்போதைய அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ், வெள்ளை மாளிகையின் முக்கிய அதிகாரிகளுடன் அல்-காய்தா தீவிரவாத அமைப்பின் செயல்பாடுகள் குறித்து ஆலோசனை நடத்தி உள்ளார்.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற வெள்ளை மாளிகை அதிகாரி ரிச்சர்ட் ஏ. கிளார்க், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் காண்டலீசா ரைஸுக்கு தனிப்பட்ட குறிப்பு ஒன்றை அனுப்பினார். அதில், அமெரிக்கர்களைக் கொல்ல அல்-காய்தா ஒருபோதும் தயங்காது என்று எச்சரித்திருந்தார்.

மேலும், இத்தாக்குதலுக்கு ஒரு வாரத்துக்கு முன்பு, அல்-காய்தாவை எதிர்கொள்வதில் அமெரிக்கா தீவிரமாக இருக்கிறதா என்று கிளார்க், ரைஸிடம் கேள்வி எழுப்பியிருந்தார். முந்தைய ஆண்டில் ஏமனில் யுஎஸ்எஸ் கோல் கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். இதனால் அல்-காய்தாவுக்கும், தலிபான்களுக்கும் மேலும் துணிச்சல் ஏற்படலாம் என்றும், அமெரிக்கர்களைக் கொன்றாலும் அதற்காக எந்த விலையும் கொடுக்க வேண்டியிருக்காது என்று அந்த அமைப்புகள் கருதக்கூடும் என்றும் அவர் எச்சரித்தார்.


இந்தத் தாக்குதல் தொடர்பான விசாரணை ஆணையத்திடம் காண்டலீசா ரைஸ் அளித்த வாக்குமூலத்தில், கிளார்க் அனுப்பிய குறிப்பு ஒரு ‘நல்ல எச்சரிக்கை’ என்றுதான் கருதியதாக தெரிவித்துள்ளார்.

# சட்டப்பேரவை நிகழ்வுகளை காண குழந்தைகள், பெரியவர்கள் ஆர்வம்

## அமைச்சர் ராஜ்மோகன் பெருமிதம்

சென்னை, செப்.07–

சட்டப்பேரவை நிகழ்வுகளை நேரலையில் காண குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை காத்திருக்கும் சூழலை உருவாக்கியுள்ளோம். ஒரு தலைமுறையையே அரசியல் படுத்திக் கொண்டிருக்கிறார் முதல்வர் விஜய். இதை அனைவரும் வரவேற்க வேண்டும் என்று அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்தார்.



சென்னையில் செய்தியாளர்களிடம் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் நேற்று கூறியதாவது: தமிழகத்தில் மோட்டார் ஸ்போர்ட்ஸ் நகரம் அமைக்கப்படும் என்ற முதல்வரின் அறிவிப்புக்கு நடிகர் அஜித்குமார் நன்றி தெரிவித்துள்ளார். இது அவரது பேரன்பையும், அத்துறை மீது அவருக்கு உள்ள ஈடுபாட்டையும் காட்டுகிறது. முதல்வர் மீது நம்பிக்கை வைத்து வாழ்த்து கூறிய அஜித்குமாருக்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

சட்டப்பேரவை நிகழ்ச்சிகள் குறித்து குழந்தைகள் பேசும் வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றன. பலரும் அதை எனக்கு பகிர்ந்து வருகின்றனர். தற்போது சட்டப்பேரவை நிகழ்வுகளை நேரலையில் காண குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை காலை 9.30 மணிக்கு காத்திருக்கும் சூழலை உருவாக்கியுள்ளோம். சினிமா வசனங்கள், பஞ்ச் டயலாக்குகளை ரீல்ஸாக போட்டவர்கள், தற்போது சட்டப்பேரவை நிகழ்வுகளை ரீல்ஸாக மாற்றி வருகின்றனர்.

ஒரு தலைமுறையையே அரசியல் படுத்திக் கொண்டிருக்கிறார் முதல்வர் விஜய். அனைவரும் இதை வரவேற்க வேண்டும். திமுக முன்னாள் அமைச்சர் கே.என். நேரு தொடர்புடைய இடங்களில் லஞ்ச ஒழிப்புத் துறையினர் சோதனை நடத்தி வருகின்றனர். அவர் ஒரு மூத்த அரசியல்வாதி. எனவே, சட்டரீதியாக அதை எதிர்கொள்வார். எங்கள் தலைவர் சொன்னதுபோல, அரசுப் பணத்தில் நாங்கள் ஒரு ரூபாய் கூட தொட மாட்டோம். தொடவும் விடமாட்டோம், தொட்டாலும் விடமாட்டோம், தொட்டவர்களையும் விடமாட்டோம். இவ்வாறு அவர் கூறினார்.

# உடன்குடி அனல் மின் நிலையத்தில் வணிக ரீதியான உற்பத்தி தொடக்கம்

சென்னை, செப்.07–

உடன்குடி அனல் மின்நிலையம் வணிக ரீதியான 660 மெகாவட் முழு மின் உற்பத்தியை தொடங்கியது என மின் வாரியம் தெரிவித்துள்ளது.



இதுகுறித்து மின் வாரியம் வெளியிட்ட அறிக்கை: தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் ரூ.13,076 கோடி மதிப்பீட்டில் தலா 660 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு அலகுகளுடன் அனல் மின்நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. கடந்த மார்ச் 13-ம் தேதி உடன்குடி மிக உய்ய அனல் மின்நிலையம் (2x660 MW) அலகு -1-ல் மின் உற்பத்தியை தொடங்கியது. தினமும் 300 முதல் 400 மெகாவாட் வரை மின் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது.

உடன்குடி அனல் மின்நிலை யத்தில் அலகு 1-ல் வணிக ரீதியான 660 மெகாவாட் முழு மின் உற்பத்தியை விரைவில் கொண்டு வர முதல்வர் உத் தரவிட்டார். அதன் அடிப்படை யில் உடன்குடி (660 மெகா வாட்) அனல் மின் நிலையம் அலகு 1-ல் வணிக ரீதியான முழு மின் உற்பத்தி அடைய பல்வேறு சோதனை ஓட்டங்கள் நடத்தப்பட்டன.

72 மணி நேரம் முழு உற்பத்தி: இதை தொடர்ந்து அலகு 1-ல் வணிக ரீதியான சோதனை உற்பத்திக்கான தொடர் முழு உற்பத்தி திறன் ஆய்வு சோதனை ஓட்டம் கடந்த 2-ம் தேதி மாலை 04.16 மணி முதல் நேற்று (5-ம் தேதி) மாலை 04.15 வரை வெற்றிகரமாக நடத்தப்பட்டு தொடர்ச்சியாக 72 மணி நேரம் முழு உற்பத்தியான 660 மெகாவாட் மின் உற்பத்தி செய்து சாதனை படைத்தது.

இந்த சாதனை மைல்கல்லை தொடர்ந்து, இந்த அனல் மின் நிலையம் அலகு 1-ல் நேற்று மாலை முதல் 660 மெகா வாட்டுக்கு மேல் வணிக ரீதி யாக முழு மின் உற்பத்திக்கு கொண்டுவரப்பட்டது. மேலும், உடன்குடி அனல் மின் நிலை யம் அலகு 2-ல் கட்டுமான வேலைகள் மிக துரிதமாக நடை பெற்று வருகிறது. விரைவில் மின் உற்பத்தியை தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அதில் கூறப்பட் டுள்ளது.

# ‘எஸ்ஐஆர் மூலம் மக்கள் தொகையில் 15% பேர் நீக்கம்’

## முன்னாள் தலைமை தேர்தல் அதிகாரி குற்றச்சாட்டு

புவனேஷ்வர், செப்.07–

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த (எஸ்ஐஆர்) பணியின் மூலம் நாட்டின் மக்கள் தொகையில் 15% பேர் நீக்கப்பட்டுள்ளதாக முன்னாள் தலைமை தேர்தல் அதிகாரி எஸ். ஒய்.குரேஷி குற்றச்சாட்டு வைத்துள்ளார்.



“எஸ்ஐஆர் மூலம் நாட்டின் மக்கள் தொகையில் சுமார் 14 முதல் 15 கோடி பேரை தேர்தல் ஆணையம் நீக்கியுள்ளது. இதில் நாட்டின் சட்டத்துக்கு புறம்பாக குடியேறியவர்களில் எத்தனை பேர் நீக்கப்பட்டுள்ளனர் என்ற விவரத்தை தேர்தல் ஆணையம் வெளியிடவில்லை. எஸ்ஐஆர் பணிக்கான அடிப்படை நோக்கம் அதுதான்.

தேசிய மக்கள் தொகை ஆணையம் செய்ய முடியாத ஒரு பணியை தேர்தல் ஆணையம் செய்துள்ளது. அதனால் அப்படி நீக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் விவரத்தை தேர்தல் ஆணையம் வெளியிட வேண்டும் என வலியுறுத்துகிறேன். ஏனெனில், மக்கள் தொகை கட்டுப்பாட்டில் முக்கிய பணியை செய்து உள்ளீர்கள். தேசத்தின் மக்கள் தொகை எண்ணிக்கையில் சுமார் 14 முதல் 15 சதவீதம் பேரை நீக்கியுள்ளது பெரிய சாதனை.

இதன் மூலம் ஜனநாயகத்தை தேர்தல் ஆணையம் டிங்கரிங் செய்துள்ளது. ஒவ்வொரு இந்தியருக்கும் வாக்களிக்கும் உரிமையை அரசியலமைப்பு வழங்குகிறது. இதற்கு தேர்தல் ஆணையத்தின் கருணை தேவையில்லை” என்று அவர் தெரிவித்துள்ளார்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணியை தேர்தல் ஆணையம் கடந்த ஆண்டு தொடங்கியது. பல்வேறு கட்டங்களாக இந்தப் பணி நடைபெறுகிறது. கடந்த ஆண்டு முதல் கட்டமாக பிஹாரில் இந்தப் பணி நடைபெற்றது. தொடர்ந்து இரண்டாவது கட்டமாக தமிழகம், புதுச்சேரி உள்ளிட்ட 9 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில் கடந்த ஆண்டு இறுதியில் நடை பெற்றது. இதைத்தொடர்ந்து மூன்றாவது கட்டமாக விடுபட்ட மாநிலங்களில் எஸ்ஐஆர் பணி தொடங்கியது.

இந்நிலையில், அண்மையில் மகாராஷ்டிரா மாநிலத்தில் எஸ்ஐஆர் பணிக்கு பின்னர் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இதில் மொத்தம் உள்ள 9.78 கோடி வாக்காளர்களில் சுமார் 7.71 கோடி பேர் மட்டுமே வாக்காளர் கணக்கெடுப்பு படிவத்தை பூர்த்தி செய்து வழங்கி உள்ளனர் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்தது. இதனை காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்த்துள்ளன.

# "என்னை ஒரேடியாகக் கொலை செய்திருக்கலாம்!"

## 90 வயது மூதாட்டியை விடிய விடிய சித்திரவதை செய்த மர்ம நபர்!

எட்டயபுரம், செப்.7–

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் அடுத்தடுத்து மூன்று வீடுகளின் பூட்டை உடைத்துக் கொள்ளையடித்த மர்ம நபர், 90 வயது மூதாட்டியை விடிய விடியத் தாக்கிச் சித்திரவதை செய்த சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

**3 வீடுகளின் பூட்டை உடைத்துக் கொள்ளை:**

எட்டயபுரம் அய்யம்பெருமாள் முதலியார் தெருவைச் சேர்ந்த சங்கர் (60), இவரது சகோதரர் மாரிக்கண்ணன் (54) மற்றும் சுந்தர் (50) ஆகியோர் குடும்பத்துடன் சென்னையில் வசித்து வருகின்றனர். திருவிழா காலங்களில் மட்டும் வந்து செல்லும் இவர்களது பூட்டிய வீடுகளின் பூட்டை இன்று காலை மர்ம நபர் உடைத்திருந்ததைக் கண்டு அக்கம் பக்கத்தினர் அதிர்ச்சியடைந்து எட்டயபுரம் காவல் துறைக்குத் தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்த போலிஸார் சோதனையிட்டதில், சுந்தர் என்பவரது வீட்டில் இருந்த வெள்ளி கொலுசு மற்றும் ரூ.1,500 பணம் திருடப்பட்டிருப்பது தெரியவந்தது.



**90 வயது மூதாட்டி மீது கொடூரத் தாக்குதல்:**

மூன்று வீடுகளிலும் கைவரிசை காட்டிய அந்த மர்ம நபர், அருகிலிருந்த அனந்தம்மாள் (90) என்ற மூதாட்டியின் வீட்டின் பின்புறமாக நுழைந்து உறங்கியுள்ளான். அதிகாலையில் மூதாட்டி விழித்து யார் எனக் கேட்க முயன்றபோது, அவரது வாயில் துணியைத் திணித்துக் கடுமையாகத் தாக்கிச் சித்திரவதை செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளான். காயமடைந்த மூதாட்டி அழுது கூச்சலிட்ட பிறகே இத்தொடர் சம்பவங்கள் வெளிச்சத்திற்கு வந்தன.

**கண்ணீருடன் மூதாட்டி கதறல் & மக்கள் கோரிக்கை:**

இச்சம்பவம் குறித்துக் கண்ணீர்மல்கப் பேசிய பாதிக்கப்பட்ட மூதாட்டி, "என் வாழ்நாளில் என் கணவரிடம் கூட நான் அடி வாங்கியதில்லை; என்னை இப்படிச் சித்திரவதை செய்வதற்குப் பதிலாக என் கழுத்தை நெரித்துக் கொன்றே இருக்கலாம்" எனக் கதறியது அனைவரையும் நெகிழ வைத்தது. எட்டயபுரம் பகுதியில் பல சிசிடிவி (CCTV) கேமராக்கள் வேலை செய்யாமல் பழுதாகிக் கிடப்பதாகவும், காவல் துறையின் இரவு நேர ரோந்து பணி அறவே இல்லாததே இதுபோன்ற சம்பவங்களுக்குக் காரணம் என்றும் பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர். தடயவியல் கைரேகை நிபுணர்கள் சோதனையிட்டுள்ள நிலையில், எட்டயபுரம் போலிஸார் வழக்குப்பதிவு செய்து தப்பியோடிய மர்ம நபரைத் தீவிரமாக வலைவீசித் தேடி வருகின்றனர்.



## கப்பலோட்டிய தமிழனின் 155-வது பிறந்தநாள் விழா!

## சேலத்தில் கவிஞர் புகழேந்தி, கவிமாமணி மணியரசு மரியாதை!

சேலம், செப்.7–

இந்திய சுதந்திரப் போராட்ட வீரரும், ஆங்கிலேயரின் கடலாதிக்கத்தை எதிர்த்துச் சுதேசி கப்பல் ஓட்டிய கப்பலோட்டிய தமிழருமான வ.உ.சிதம்பரனாரின் 155-வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு, சேலத்தில் பைந்தமிழ்க் கலை இலக்கியப் பேரவை சார்பில் அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்துச் சிறப்பு மரியாதை செய்யப்பட்டது.

**தலைவர்கள் தலைமையில் மாலை அணிவிப்பு:**

சேலம் பில்லுக்கடை அருகில் அமைந்துள்ள வ.உ.சிதம்பரனாரின் திருவுருவச் சிலைக்கு, பைந்தமிழ்க் கலை இலக்கியப் பேரவையின் மாநிலத் தலைவர் கவிஞர் மா. புகழேந்தி மற்றும் மாநிலச் செயலாளர் கவிமாமணி வீர. மணியரசு ஆகியோர் இணைந்து மாலை அணிவித்துத் தங்களது வீரவணக்கத்தைச் செலுத்தினர்.

**திரளாகக் கலந்துகொண்ட தமிழ்ச் சான்றோர்கள்:**

இந்நிகழ்ச்சியில் உயிர்மெய்த் தமிழ்ச் சங்கம் மற்றும் உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் மாநிலத் தலைவர் சேலத்துப் பாரதி சொல்லரசர், கவிஞர் பொன்னுசாமி, ஜீவன் யுவராஜ், கவிஞர் கௌசல்யா, கவிஞர் அமுதாமுருகையன், மனம் மோகன், கோவை சுந்தரம், கவிஞர் பாரதிதமிழ், ஜெயவேல், காமராஜ் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த முக்கிய நிர்வாகிகளும் கவிஞர்களும் திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



## தொடர் கனமழை வெள்ளத்தில் தத்தளிக்கும் பீகார்

பாட்னா, செப்.07–

பீகார் மாநிலம், அருகில் உள்ள நேபாள நாட்டில் கனமழை பெய்து வருகிறது.தொடர் கனமழையால் பாட்னா, வைஷாலி, முசாபர்பூர் உள்பட பல மாவட்டங்கள் வெள்ளத்தில் தத்தளிக்கின்றன. மாநிலத்தின் முக்கிய ஆறுகளான கங்கை, கோசி, கண்டக் ஆகியவற்றில் நீர்மட்டம் அபாய அளவை தாண்டி செல்கிறது.

பாட்னாவில் உள்ள கங்கை ஆற்றில் அதிகபட்ச வெள்ள மட்டத்தை விட அதிகமாக தண்ணீர் ஓடுகிறது. இதனால் பாட்னாவில் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. ஆற்றில் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் தாழ்வான பகுதியில் உள்ள மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அரசின் அதிகாரப்பூர்வ அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சென்னையின் 2வது விமான நிலையம் அமைக்க செய்யூர், கும்மிடிப்பூண்டி ஆகிய 2 இடங்களை தேர்வு செய்தது த.வெ.க., அரசு



சென்னை, செப்.07–

பரந்தூர் திட்டத்திற்கு மாற்றாக சென்னையின் இரண்டாவது விமான நிலையத்தை அமைக்க, செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி ஆகிய இரண்டு இடங்களை தமிழ்நாடு அரசு தேர்வு செய்துள்ளது. இதுகுறித்து சாத்தியக்கூறு ஆய்வுகளை மேற்கொள்ள இந்திய விமான நிலைய ஆணையத்திற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. செய்யூர் தளம் புதுச்சேரி விமான நிலையத்திலிருந்து 40 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது

கும்மிடிப்பூண்டி தேர்ந்தெடுக்கப்பட்டால், நீண்ட காலமாக புறக்கணிக்கப்பட்டு வரும் திருவள்ளூர் மாவட்டத்தின் கட்டமைப்புகளும் பொருளாதாரமும் மேம்படும். மாநெல்லூர் பகுதி தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியும், கும்மிடிப்பூண்டி மற்றும் ஸ்ரீசிட்டி சிப்காட் பகுதிகளுக்கு அருகிலும் அமைந்துள்ளதால் சரக்கு போக்குவரத்து எளிதாகும்.

மேலும், வடமாவட்ட மக்கள் சென்னை விமான நிலையத்திற்குச் செல்ல வேண்டிய தேவையும் குறையும்.

இந்திய விமான நிலைய ஆணையத்தின் ஆய்வறிக்கை மற்றும் பல்வேறு ஒழுங்குமுறை அனுமதிகளைப் பெற்று இத்திட்டம் நடைமுறைக்கு வர குறைந்தது 5 முதல் 6 ஆண்டுகள் ஆகும்.



## திருப்பூர் வடக்கு மாவட்டத்தில் காங்கிரஸ் அதிரடி!

## அவிநாசி தொகுதிப் பொறுப்புகளுக்கான ஆலோசனைக் கூட்டம்!

அவிநாசி, செப்.07

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் திருப்பூர் வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட 112 அவிநாசி சட்டமன்றத் தொகுதியில், 'எஸ்.எஸ்.ஏ.–2' (SSA 2) இயக்க மறுசீரைமைப்பு மற்றும் பதவிகளுக்கான விண்ணப்பம் வழங்குதல் மற்றும் பெறுதல் தொடர்பான சிறப்புக் கூட்டம் அவிநாசியில் நடைபெற்றது.

**முக்கிய நிர்வாகிகள் பங்கேற்பு & ஆலோசனை:**

அவிநாசி ஆனந்தாஸ் ஹாலில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு, மேடை பார்வையாளராக எஸ்.எஸ்.ஏ.–2 இயக்க மறுசீரமைப்புத் திருப்பூர் வடக்கு மாவட்டப் பார்வையாளர் திரு. பி.எஸ். ஜெய்கணேஷ் மற்றும் திருப்பூர் வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. D. செல்வக்குமார் ஆகியோர் தலைமை தாங்கினர்.

இந்நிகழ்ச்சியில் அவிநாசி வட்டாரத் தலைவர் ஸ்ரீ கொங்கு தங்கமுத்து, அவிநாசி வடவட்டாரத் தலைவர் T.S. லட்சுமணசாமி, அவிநாசி நகரப் பொறுப்பாளர் P. கோபால்சாமி, திருமுருகன்பூண்டி நகர காங்கிரஸ் கமிட்டிப் பொறுப்பாளர் A. அசோக் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

சார்பு அமைப்புகளின் நிர்வாகிகள் வருகை: இக்கூட்டத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் மாநில, மாவட்ட, வட்டார, நகர, கிராம, வார்டு கிளை மற்றும் சார்பு அமைப்புகளின் தலைவர்கள், நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் மற்றும் முக்கிய உறுப்பினர்கள் திரளாகக் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தின் வாயிலாக அவிநாசி வட்டார மற்றும் நகரக் காங்கிரஸ் கமிட்டியின் இயக்க மறுசீரமைப்புப் பணிகள் தீவிரமடைந்துள்ளன.

## சட்டமன்றத்தில் தனக்கான வாய்ப்பை உதயநிதி ஸ்டாலின் பயன்படுத்தவில்லை - அமைச்சர் அருண் ராஜ் விமர்சனம்



சென்னை, செப்.07–

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சட்டமன்றத்தில் தனக்கான வாய்ப்பினை சரியாக பயன்படுத்தவில்லை என அமைச்சர் அருண்ராஜ் விமர்சித்துள்ளார்.

தேசிய கண்தான இரு வார விழாவை முன்னிட்டு, ரோட்டரி சங்கம், ராஜன் கண் வங்கி சார்பில் சென்னை பெசன்ட் நகர் எலியட்ஸ் கடற்கரையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கண்தான விழிப்புணர்வு பேரணியை மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அருண்ராஜ் தொடங்கி வைத்தார்.

பேரணியை துவக்கி வைத்து பேசிய அமைச்சர் அருண்ராஜ், "நாம் ஒவ்வொரு நிகழ்விற்கும் செல்லும்போது குறிப்பாக ரத்ததான முகாமிற்கு செல்லும்போது தானத்தில் சிறந்தது இரத்ததானம் என்றும், கண்தான முகாமிற்கு செல்லும்போது கண்தானம் தான் சிறந்தது என்றும், உணவு வழங்கும் நிகழ்வுகளுக்கு செல்லும்போது அன்னதானம் சிறந்தது என தெரிவிப்போம்.

ஆனால் என்னை பொருத்தவரை அனைத்து தானங்களுமே மிகவும் சிறந்த தானங்கள் தான். குறிப்பாக கண்தானம் என்பது ஒரு சிறந்த விஷயம். ஒருவர் இந்த உலகை ஏன் இந்த அழகான கடற்கரையை பார்ப்பதற்கு கூட கண்பார்வை என்பது மிகவும் இன்றியமையாதது. எத்தனையோ நபர்கள் கண்பார்வை இல்லாமல் இருக்கின்றனர் . ஒருவர் கண்தானம் வழங்குவதன் மூலம் இரண்டு பேருக்கு நம்மால் பார்வையை வழங்க இயலும். மரணம் அடைந்த ஒருவரின் உடல் உறுப்புகளை தானம் செய்வதன் மூலம் பலருக்கு மறுவாழ்வு கிடைக்கிறது. இதுகுறித்த விழிப்புணர்வு குறைவாக உள்ளது. பொதுமக்களுக்கு உறுப்புகளை தானம் செய்வது குறித்து நாம் இன்னும் நிறைய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டி உள்ளது.

மறைந்த இயக்குநரும், திரைப்பட நடிகருமான பாக்யராஜ் கண்தானம் செய்திருந்தார். இந்த நிகழ்வு தெரிய வந்த பிறகு 600 நபர்கள் தாமாக முன்வந்து கண்தானம் வழங்க முன்வந்துள்ளனர். எனவே பிரபலங்களும் இதுபோன்று நிகழ்வுகளில் பங்கேற்பதன் மூலம் பொது மக்களுக்கு ஒரு பெரிய விழிப்புணர்வு கிடைக்கிறது" எனத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் அருண்ராஜ், "எதிர்கட்சி உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் கேள்வி கேட்பது என்பது அவர்களுடைய கடமை. நியாயமான கோரிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பும்போது நிச்சயம் முதலமைச்சர் அதற்கான பதிலை அளிப்பார். எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது திமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு மிக சிறப்பாக இருந்தது போன்றும், இந்த 100 நாட்களில் தான் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது என்பது போன்ற ஒரு மாயையை ஏற்படுத்தும் வகையில் பேசியுள்ளார்.

சட்டமன்றத்தில் எந்த ஒரு உறுப்பினராக இருந்தாலும் தற்போது சமூகத்தில் நிலவும் சூழ்நிலை, மக்களின் எண்ணங்கள் ஆகியவற்றை பிரதிபலிக்கக் கூடிய வகையில் அவருடைய பேச்சுக்கள் இருக்க வேண்டும்.

முதலமைச்சர் தலைமையிலான இந்த அரசு அமைந்த உடன் பெண்கள் பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டு, பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது.

இப்படிப்பட்ட நிலையில் எதிர்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் இப்போது தான் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்தது என்கின்ற தோற்றத்தை திட்டமிட்டு உருவாக்கும் வகையிலும், இந்த அரசிற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலும் பேசியுள்ளார்.

ஆனால் மற்ற எதிர்கட்சியை சேர்ந்த தலைவர்கள் யாரும் அப்படி பேசவில்லை. என்னைப் பொருத்தவரை எதிர்க்கட்சித் தலைவர் சட்டமன்றத்தில் தனக்கான வாய்ப்பினை சரியாக பயன்படுத்தவில்லை என்று நினைக்கிறேன். முதலமைச்சர் அவருடைய பதிலுரையில் அனைத்து கேள்விகளுக்கும் தெளிவாக விளக்கம் அளிப்பார்" எனத் தெரிவித்தார்.



## கயத்தாறு மக்களுக்காக ரூ.7 லட்சம் மதிப்பில் புதிய கட்டிடம்!

### கவுன்சிலர்கள், நிர்வாகிகள் திரளாகப் பங்கேற்பு!

கயத்தாறு செப்.7

தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறு பேரூராட்சிக்குட்பட்ட ராஜீவ் நகர் 5–வது வார்டு பகுதியில், 15–வது மானிய நிதிக் குழு திட்டத்தின் கீழ் ரூ.7 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடத்தின் திறப்பு விழா இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

**பேரூராட்சி மன்றத் தலைவர் திறந்து வைத்தார்:**

பொதுமக்களின் பயன்பாட்டிற்காகக் கட்டப்பட்டுள்ள இப்புதிய கட்டிடத்தை, கயத்தாறு பேரூராட்சி மன்றத் தலைவர் சுப்புலட்சுமி இராஜதுரை அவர்கள் ரிப்பன் வெட்டி முறைப்படி திறந்து வைத்தார். திறப்பு விழாவிற்கு வருகை தந்த பேரூராட்சி மன்றத் தலைவருக்கு, அப்பகுதி பொதுமக்கள் மற்றும் ஊர் நிர்வாகிகள் பட்டாசுகள் (வேட்டு) வெடித்தும், பொன்னாடைகள் போர்த்தியும் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

**திரளாகக் கலந்துகொண்ட முக்கிய நிர்வாகிகள்:**

இந்நிகழ்ச்சியில் பேரூராட்சி மன்றக் கவுன்சிலர் கோகிலா, தூத்துக்குடி வடக்கு மாவட்டச் சுற்றுச்சூழல் அணியின் துணை அமைப்பாளர் இராஜதுரை, முன்னாள் கவுன்சிலர் சேக்தாவூது, தகவல் தொழில்நுட்பப் பிரிவுச் செயலாளர் கார்த்திக் மற்றும் வேல்சாமி, மணி, கருப்பசாமி, ஊர் நாட்டாண்மை நிர்வாகிகள் மற்றும் திரளான பொதுமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000